## பொது வழித்தடங்களை மறைக்கும் வகையில்

# அமைக்கப்பட்டிருந்த கடைகள் மீது நடவடிக்கை

கோலாலம்பூர், மே 31-

நேற்று முன்தினம் இரவு தலைநகரில் பொது வழித்தடங்களை மறைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த 35 கடைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு பறிமுதல் செய்துள்ளது.

செபூத்தே, பத்து செத்தியா வங்சா, புக்கிட் பிந்தாங், தித்திவங்சா ஆகிய பகுதிகளில் உள்ள கிளை அலுவலகங்களின் ஒத்துழைப்போடு அமலாக்கப் பிரிவினர் இந்தச் சோதனைகளை மேற்கொண்டதாக மாநகர் மன்றத் தரப்பு ஃபேஸ்புக் பக்கத்தில் கருத்துப் பதிவேற்றம் செய்துள்ளது.

ஜாலான் கூச்சாய் மாஜு, ஸ்ரீ பெட்டாலிங், ஜாலான் துன் சம்பந்தன், ஜாலான் சுல்தான், ஜாலான் செஜாகா, ஜாலான் மக்கோத்தா, ஜாலான் பீல், ஜாலான் டத்தோ செனு, ஜாலான் வங்சா டெலிமா, ஜாலான் செத்தியாவங்சா, தாமான் ஸ்ரீ ரம்பாய் ஆகிய பகுதிகளில் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

1974 கட்டடம் , வழித்தடங்கள் சட்டம் பிரிவு 46க்குட்பட்ட பொது இடங்கள், வழிகளுக்கு தடங்கள் ஏற்படுத்தும் குற்றத்திற்காக 35 வர்த்தகத் தளங்கள் மீது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதிலும் அமலாக்கத் தரப்பினரின் உரிமம் இல்லாமல் வியாபாரம் செய்து வந்த அந்நியப் பிரஜைகளின் இரண்டு கடைகள் மீதும் பறிமுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



இதுதவிர 2016 (கூட்டரசுப் பிரதேச கோலாலம்பூர்) வியாபாரம் உரிம சிறிய நிலையிலான சட்டத்தின் கீழும் 2016 (கூட்டரசுப் பிரதேச கோலாலம்பூர்) உணவுப் பகுதிகளுக்கான சிறுநிலைச் சட்டம் ஆகியவற்றின் தலா இரண்டு நோட்டீஸ்களும் வெளியிடப்பட்டன எனவும் மாநகர் மன்றம் விவரித்துள் ளது.

குறிப்பிட்ட கடைகளில் பொது இடங்களுக்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையில் மேஜைகள் , நாற்காலிகள் , விற்பனைப் பொருட்கள் வைக்கப் பட்டிருந்தன. அதிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான வழித்தடங்கள், வாகனம் நிறுத்துவதற்கான பொது இடங்களில் அந்த வியாபாரி கள் இதுபோன்ற நடவடிக்கை களை மேற்கொண்டது அடையாளம் காணப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்டட பொருட்கள அனைத்தும் செராஸ், தாமான் மிஹர்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.